அஸ்மத் குருப்யோ நம:

அஸ்மத் பரம குருப்யோ நம:

அஸ்மத் ஸர்வகுருப்யோ நம:

ஸ்ரீரங்கநாதயதீஸேகரம் ஆஸ்ரயாம:

வேதாந்த லக்ஷ்மணமுநே: பாதரேகாமயம் ஸதா

ததீனப்ருவ்ருத்யாதீம் ஹாரீதம் மாதவம் பஜே

# தேசிகப்ரபந்தம்...பிள்ளையந்தாதி



## பதினேழாம் பாசுரம்

காவலனெங்கள் கிடாம்பிக்குலபதிஅப்புளார்தம்

தேமலர்ச்சேவடிசேர்ந்துபணிந்து அவர்தம்மருளால்

நாவலரும் தென்வடமொழிநற்பொருள்பெற்ற நம்பிக்

காவல!தூப்புல்குலத்தரசே! எம்மைக்காத்தருளே

## பாசுரம் பொருள் அனுபவ ப்ரமாணங்களுடன்

உயர் கிடாம்பி ஆச்சான் ஞான பரம்பரை வழி தோன்றலான ஸ்வாமி தேசிகனிடம் காத்தருள ப்ரார்தனை.

காவலர் எங்கள் கிடாம்பிக்குலபதி அப்புளார்தம்

ஸ்வாமி தேசிகன் எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் என கிடாம்பி ஆச்சான் மூலம் தாம் பெற்ற பாக்யத்தை கொண்டாடும் சிறப்பு வாய்ந்த பாசுரம்.

அடற்புள் அரசினும் அந்தணர் மாட்டினும் *
இன்னமுதக் கடற்பள்ளி தன்னினும் காவிரி உள்ளம்
உகந்த பிரான் *

இடைப்பிள்ளையாகி உரைத்தது உரைக்கும் *
எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் எங்கள்
வார்த்தையுள் மன்னியதே.

**(பரமபத ஸோபானம்)**

அண்மையில் கிடாம்பி ஆச்சான் விஷயமாய்

ஶ்ரீ உ.வே.சேட்லூர் வா.ஶ்ரீவத்ஸாங்காசாரியார் ஸ்வாமியால் அருளபட்டது

(ஶ்ரீமத் வேதாந்த தேசிக மங்களம்)தமிழ் உரை exact extract

..பக்கம் 64 ,65

நியாஸதிலகவ்யாக்யானத்தில் ஸ்ரீ குமாரவரதாசாரியர் அருளியதிலிருந்து ஸ்ரீப்ரணதார்த்தி ஹராசார்யர், ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீரஹஸ்யம் ஆகிய உபயஸிம்ஹாஸனாதிபதி என்று ஏற்படுகிறது. அவரது வாக்கியம் வருமாறு:

"पुरा खलु भगवतो भाष्यकारस्य बहुष्वपि अन्तेवासिषु अत्रिगोत्र तिलक श्रीकृष्णाचार्याः महानसिकं पदमधिगम्य द्वादशकृत्वः तत्सकाशादेव शारीरकं शास्त्रमधिचक्रिरे। अतो भाष्यकारश्च तानेव भाष्यसम्प्रदायप्रथम

गुरुनपिचकार । अहं पुनः अद्य विद्यया जन्मना च तत्पौत्रजान् रामानुजावार्यान्त्रीतः परमकारुणिकेन पुरुषोत्तमेन।

இதனால் தான் நம் பெரியோர்கள் ஸ்ரீதேசிகனுக்குக் கிடைத்த இந்த ரஹஸ்ய பரம்பரையை போற்றி அதன்படி உபாயானுஷ்டானங்களைச் செய்து வருகின்றனர்.

**சித்ரகூடத்தில் நதியை ராமன் வர்ணித்தல்.**

தர்ஸநம் சித்ரகூடஸ்ய மந்தாகிந்யா: ச ஸோபதே|
அதிகம் புரவாஸாச்ச மந்யே தவ தர்சநாத்||

**(ஸ்ரீமத் ரா-அயோ)**

இதே போலல்லவா நம் கிடாம்பி ஆச்சான் வழி வரும் தேசிக பரம்பரை வர்ணிக்கபடுகிறது.

தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து

ந மே பக்த: ப்ரணஸ்யதி **(கீதை)**

பணியும் பக்தன் அழிவதில்லை

பகவானின் உத்தம அநுக்ரஹம்

என்பது அவன் அடியார்க்கு நம்மை ஆட்படுத்துவதாகும்.

அமலனாதிபிரான் அடியார்க்கென்னையாட்படுத்த விமலன் *

விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன் *

நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதிளரங்கத்தம்மான் *

திருக்கமலபாதம் வந்து
என்கண்ணினுள்ளனவொக்கின்றதே

**(அமலனாதிபிரான்)**

அவர் தம் அருளால்

இங்கு இன்னும் விஸ்தாரமாய் பகவத் அடி பணிந்த ஆச்சார்யன் அநுக்ரஹம் அனைத்தினும் மேம்பட்டதாக பேசப்படுகிறது.

மா ஸூசஸ்ஸம்பதம் தைவீம் அபிஜாதோஸி பாண்டவ
**(கீதை)**

நீ அஸூர பிறவி அல்ல தெய்வப்பிறவீ. இப்படி கீதாச்சார்யன் திருவாக்கால் அருள் பெற்றான் அர்ஜூனன்.

ஆழ்வாரும் திருத்தி பணி கொள்ளும் கைங்கர்யம் செய்வோர்கள் நம் ஆச்சார்யர்கள் என்கிறார்.

பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்
செயல்நன்றாகத்திருத்திப் பணிகொள்வான் *
குயில்நின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி *
முயல்கின்றேன் உன்தன்மொய்கழற்கன்பையே
**(கண்ணினுன் சிறுதாம்பு)**

நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற நம்பி

ஆச்சார்யன் இரு மொழி வித்தகராய் ஸாரதமமான அர்தம்

அதனை பகவத் அருளால் பெற்றவர்.

வித்ராஸினி விபுதவைரிவரூதினினாம் பத்மாஸனேன பரிசாரவிதொள ப்ரயுக்தா|

உத்ப்ரேக்ஷ்யதே புதஜனைருப பதிபூம்நா கண்டா ஹரே: ஸமஜனிஷ்ட யதாத்மனேதி||

(ஸங்கல்ப ஸூர்யோதயம் ப்ரதமோங்க: ப்ரஸ்தாவனா 14)

ஸ்ரீநிவாஸன் கட்டளையால் எதிரிகளை தன் நாதத்தினால்

விரட்டும் நித்யஸூரியான கண்டை அவனோடு விசேஷமாய்

கூடி எவராக தோன்றியதோ அதனால் எம்பெருமானாகவே

அறியப்படுவார் அறிஞர்களால்.

விம்சத்யப்தே விஸ்ருதநாநாவித

வித்யஸ்த்ரிஸத்வாரம் ஸ்ராவித ஸாரீரகமாஷ்ய:|

ஸ்ரேய: ஸ்ரீமாந்வேங்கடநாத: ஸ்ருதிபத்யம் நாதப்ரீத்யை நாடகமர்த்யே வ்யதிதைதத்||

(ஸங்கல்ப ஸூர்யோதயம் ப்ரதமோங்க: ப்ரஸ்தாவனா 15)

அந்த எம்பெருமானே நம் ஆச்சார்ய ஸார்வபௌமன் வேங்கடநாதன். 20 வயதிற்குள்

பற்பல கலை கற்று ஸ்ரீபாஷ்ய ப்ரவர்தகம் செய்து வேதமார்கம் விலகா ஸங்கல்ப ஸூர்யோதயம் இயற்றினார்.

பகவானே இரு மொழியானவன் நெஞ்சம் உகந்தவன் அந்தண செல்வம் வேதம் தனில் வாழ்பவன் என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

இந்திரற்கும்பிரமற்கும்முதல்வன்தன்னை
இருநிலம்கால்தீநீர்விண்பூதமைந்தாய் *
செந்திறத்ததமிழோசைவடசொல்லாகித்
திசைநான்குமாய்த்திங்கள்ஞாயிறாகி *
அந்தரத்தில்தேவர்க்கும்அறியலாகா
அந்தணனை அந்தணர்மாட்டுஅந்திவைத்த
மந்திரத்தை * மந்திரத்தால்மறவாது என்றும்
வாழுதியேல் வாழலாம்மடநெஞ்சம்மே!

**(திருநெடுந்தாண்டகம்)**

காவல் தூப்புல் அரசே எம்மைக் காத்தருளே.

ப்ரார்த்தனை ஸ்வாமி தேசிகனிடத்தில்

அருள் ,இன்னருள் ,உன்னருளே
நரகம் அழுந்தாமல் எனை காக்கும்

நந்தாநரகத் தழுந்தாவகை * நாளும்
எந்தாய்! தொண்டரானவர்க்கு இன்னருள்செய்வாய்! *
சந்தோகா! தலைவனே! தாமரைக்கண்ணா! *
அந்தோ! அடியேற்கு அருளாய்உன்னருளே
**(பெரிய திருமொழி)**

அஸ்மாத்ருஷாம் அபக்ருதௌ சிர-தீக்ஷிதாநாம்
அஹ்நாய தேவி தயதே யதஸௌ முகுந்த:|

தத்நிஷிதம் நியமித: தவ மௌளி தாம்நா
தந்த்ரீ நிநாத மதுரை: ச கிராம் நிகும்பை:||

**(கோதாஸ்துதி 5)**

நீண்டகாலமாய் தவறு செய்வதையே நீள் விரதமாய் கொண்டவர்கள் நாங்கள்.

உன்சூடிக்கொடுத்த மாலை பாடி கொடுத்த பாமாலை நாங்கள் அநுசந்தித்து வேண்டுவதால் முகுந்தன்

அருள் பெற்று தருகின்றது

## முடிவுறைப்பொருள்:

பகவான் தொடங்கி ராமானுசன் அப்புள்ளார் மூலம் பெற்ற பேறு கொண்டு அடியோங்களை அரணாக காக்க ஆச்சார்யனிடம் ப்ரார்த்தனா ரூப பாசுரம் இது.

**தொடரும். . .**